பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 81 நாள் : 12.06.2018

**சொத்து உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட மண்டலங்களில் சொத்துவரி கேட்பு அட்டைகளை பெற்றுக் கொள்ளலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம்/1919, பிரிவு 138, அட்டவணை–IV, பாகம்–1A, விதி 4(1) & (4) மற்றும் பாகம்–VI, விதி 20ன்படி, சொத்துவரி கேட்பிற்காக, சொத்துவரி அட்டைகள் சொத்து உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொத்துவரி செலுத்தும் சொத்து உரிமையாளர்களின் I/2018–19 முதல் II–2023/24 வரையிலான காலத்திற்குரிய சொத்துவரி கேட்பு அட்டைகள் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகங்களுக்கு சொத்துவரி கேட்பு அட்டைகளை சொத்து உரிமையாளர்களுக்கு அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, சொத்து உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட மண்டலங்களை அணுகி சொத்துவரி கேட்பு அட்டைகளை பெற்றுக் கொள்ளுமாறும், செலுத்த வேண்டிய சொத்துவரியினை உடனடியாக செலுத்திடுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**